Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 11 புதன்கிழமை (27-8-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 261

# கடந்த ஆண்டு ஜூலைக்கு பின்பே வடக்கில் பலர் காணாமற்போயினர்!

## மன்னிப்புச்சபை தகவல்

லண்டன், ஒகஸ்ட் 27

1995 டிசம்பரில் அரச படைகள் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் எழுநூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல் போயிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த ஆண்டு ஜூலையில் யாழ். நகரில் தற்கொலை குண்டுதாரி ஒருவர் நடத்திய தாக்குதலின் பின்னரே இவர்களில் பெரும்பாலானோர் காணாமல் போயிருக்கின்றார்கள்.

இவ்வாறு ர்வதேச மன்னிப்புச் சபையும் இதர செய்தி வட்டாரங்களும் தெரிவித்ததாக பி.பி.ஸி. நேற்று அறிவித்தது.

1995 டிசம்பர் வரை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ். குடாநாட்டுக்கும் கிழக்கில் மட்டக்களப்புக்கும் சர்வதேச மன்னிப்புச்சபைப்பிரதிநிதிகள் நேரடி விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் காணாமல் போனதாகக் கூறப்படும் எழுநூறு பேரின் விடயம் குறித்து (8ஆம் பக்கம் பார்க்க)

## இத்தாலியில் கைதானவர்களில் ஐம்பது பேர் இலங்கையர்கள்

ரோம், ஒக. 27

கடந்த ஞாயிற்றுக்கிழமை கப்பல் மூலம் இத்தாலியின் தென்பகுதிக்குள் சட்டவிரோதமாக நுழைந்த சமயம் கரையோரப் பாதுகாப்புப் படையினராலும் பொலீசாராலும் கைது செய்யப்பட்ட 450 பேரில் 50 பேர் இலங்கையர்கள் என தற்போது இனங் காணப்பட்டுள்ளனர்,

இந்த 50 இலங்கையரும் விரைவில் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளனர் என இத்தாலியப் பொலீசார் தெரிவித்தனர். (உ-10-21)

## மண்எண்ணெய் விநியோகம் சகலருக்கும் ஒரே நாளில்!

யாழ்ப்பாணம், ஒக. 27

குடாநாட்டில் ஒரே நாளில் சகலருக்கும் இரண்டு லீற்றர் வீதம் மண்எண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

கடந்த தடவை மண்எண்ணெய் விநியோகத்தை ப. நோ. கூ. சங்கங்கள் வெவ்வேறு தினங்களில் மேற்கொண்டதால் சகலரும் மண்எண்ணெய் பெறமுடியவில்லை என்று முறைப்பாடு கூறப்பட்டது.

சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் விநியோகத்துக்கான மண்எண்ணெயை வழங்கிய பின்னர் குறிப்பிட்ட ஒரே தினத்தில் அவற்றை பொதுமக்களுக்கு வழங்குமாறு சங்கங்களுக்கு பணிப்புரை விடுக்கப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். [உ-3]

## இனிமேல் மரம் தறிக்கவும் விறகு எடுத்துச் செல்லவும் அனுமதிப் பத்திரம் அவசியம்

யாழ்ப்பாணம், ஒக. 27

குடாநாட்டில் அனுமதிப் பத்திரம் பெறாமல் மரம் தறித்தல், விறகு எடுத்துச் செல்லல் ஆகியவை உடனடியாகத் தடை செய்யப்படுவதாக யாழ்.அரசஅதிபர் க.சண்முகநாதன் தெரிவித்தார்.

குடாநாட்டில் அனுமதிப் பத்திரம் பெறப்படாமல் மரங்கள் தறிக்கப்பட்டு விறகுக்காக பயன்படுத்தப்படுவதாகவும் —

சட்டவிரோதமாக விறகு வெட்டி எடுத்துச் செல்லப்படுவதாகவும்

தகவல் கிடைத்துள்ளதையடுத்து இந்த ஏற்பாடு நடைமுறைக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## வடக்கு - கிழக்குக்கு 3 நிர்வாக அலகுகள்?

கொழும்பு, ஒக. 27

உத்தேச அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் வடக்கு — கிழக்குக்கு மூன்று நிர்வாக அலகுகள் அமைக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அரசு சிபார்சு செய்யவுள்ளது.

முழு வடமாகாணத்துக்கும் ஒன்று. மட்டக்களப்பு — திருகோணமலைக்கு மற்றொன்று. முழு அம்பாறை மாவட்டத்துக்கும் மூன்றாவது நிர்வாக அலகு.

இதுவே அரசின் திட்டம் என பிரபல சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [உ-10]

## கொரியக் கப்பல் தரித்துள்ள பகுதியில் மோதல் தவிர்ப்பு

முல்லைத்தீவுக் கடலில்விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொரிய கப்பல் நங்கூரமிட்டுள்ள கடற்பகுதியில் 3 கிலோ மீற்றர் சுற்றாடல் பகுதி மோதல் தவிர்ப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கப்பல் அப்பகுதியில் இருந்து எடுத்துச் செல்லப்படும் வரை இந்தப்பிரகடனம் நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிறு அப்பகுதிக்கு சென்று கப்பலைப் பார்வையிட்ட ஐந்து வட-கொரிய மாலுமிகளும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளும், கப்பல் நிறுவன அதிகாரிகளும் இன்று கொழுபில் கூடி ஆராயவிருக்கின்றனர்.

கப்பல் ஓடிச்செல்லக் கூடிய சூழ்நிலையில் இருப்பதாக அந்த ஐந்து மாலுமிகளும் சிபார்சு செய்துள்ளதால். எப்போது இக்கப்பலை எடுத்துச் செல்வது என்பது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும். (உ-21-3)

## ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு விசேட பிரதிநிதி இன்று வருகை

யாழ்ப்பாணம், ஒக. 27

மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணைக்குழுவின் விசேட தொடர்பாளர் பார்க்வலி நிடியே (Mr Bacre Waly Ndiaye) இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

அவர் இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்.

பொதுவாகக் குடாநாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்தும்—

குறிப்பாக, நீதிமன்ற விசாரணையின்றி ஆள்கள் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவது குறித்தும் -

அவர் விசாரிப்பார் என அறிய வருகின்றது.

செனகல் நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணி நிடியேயின் விஜயம், குடாநாட்டின் மனித உரிமை பேணும் நிலைமை குறித்த விவகாரத்தில் முக்கிய இடம்பெறும் எனக் கணிப்பிடப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் விசேட அழைப்பை ஏற்று கடந்த 25 ஆம் திகதி கொழும்பு வந்து சேர்ந்த அவர்எதிர் வரும் 5 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார். (உ-5-10)

## தனியார்வர்த்தகர்கள் யுத்த ஹெலிகளை வாங்கமுயன்றதுஏன்?

கொழும்பு, ஒக. 27

யுத்த ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்து அவற்றை ஸ்ரீலங்கா அரசுப் படைகளுக்கு வாடகைக்கு விட்டு, பெரும் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடனேயே தனியார் விமானிகள் யுத்த ஹெலிகளை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அரசின் அனுமதியின்றி ரஷ்யாவிடமிருந்து யுத்த ஹெலிகளை வாங்க முயன்ற தனியார் வர்த்தகர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. [உ-10]

## படகுகள் தகர்ப்பு

கொழும்பு, ஒக. 27

முல்லைத்தீவுக் கடலோரத்தில் புலிகளின் இரு படகுகளை நேற்று முன்தினம் மாலை கடற்படையினர் தகர்த்து அதிலிருந்த மூன்று புலிகளைக் கைதுசெய்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-4-5-10)

## 2 புதிய மின்மாற்றிகள் கல்முனையில் தகர்ப்பு!

மட்டக்களப்பு, ஒக. 27

கிழக்கு மாகாணத்தில் அடுத்தடுத்து தகர்க்கப்பட்ட மின்மாற்றிகளுக்கு மாற்றீடாகப் பொருத்தவென கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு கல்முனை பாண்டிருப்பு மின்சார சபை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த 2 மின்மாற்றிகளை நேற்று முன்தினம் நள்ளிரவு ஆயுதங்களுடன் நுழைந்த இனந்தெரியாத குழுவினர் குண்டு வைத்து தகர்த்துள்ளனர்.

நள்ளிரவு அங்கு நுழைந்த அந்தக் குழுவினர் முதலில் காவலாளியின் கண்ணைக் கட்டினர் எனவும் -

அங்கிருந்த லொறி ஒன்றையும் தீயிட்டுக் கொளுத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தகர்க்கப்பட்ட இரு மின்மாற்றிகளின் பெறுமதி 11 லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது .[உ-3-5-10-21]

## 128 ராணுவ அதிகாரிகளுக்கு ஒரே சமயத்தில் பதவியுயர்வு

கொழும்பு, ஒக. 27

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 128 அதிகாரிகளுக்கு ஒரே சமயத்தில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வளவு எண்ணிக்கையில் பதவி உயர்வுகள் ஒரே சமயத்தில் வழங்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

நீண்ட காலமாக பல அதிகாரிகளுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்படாமல் இருந்ததே பெரும் எண்ணிக்கையில் தற்போது பதவி உயர்வுகள் வழங்கக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

23 கேணல்களுக்கு பிரிகேடியர் பதவியும்—

35 லெப்டினன்ட் கேணல்களுக்கு கேணல் பதவியும் —

70 மேஜர்களுக்கு லெப்டினன்ட் கேணல் பதவியும்—

வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பதவி உயர்வுகள் வழங்கப்படுவது தாமதமானதால் இதுவரை காலமும் பல பிரிக்கேட்டுகளின் தளபதிகளாக பிரிகேடியர்களுக்குப் பதிலாக கேணல்களே கடமையாற்றி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-4-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இரத்தினசாமிக்குருக்கள் பூர்ணானந்தக்குருக்கள்

மட்டக்களப்பு மாமங்கப்பிள்ளையார் கோயில் பிரதம குருக்கள் இரத்தினசாமிக்குருக்கள் பூர்ணானந்தக்குருக்கள் 25-08-1997 இரவு மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் கெங்காசரோஜினியின் பாசமிகு கணவரும், பூரணசந்திரானந்தக்குருக்கள், பூரணகீத சந்திரக்குருக்கள், சுதாகரசர்மா, ஹேமலதா, சொர்ணலதா, ஜனகலதா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணிய சர்மா (கல்லடி), சுப்பிரமணியசர்மா (உடுவில்), பாலராணி, சரஸ்வதி தேவி ஆகியோரின் மாமனாரும், சோ. சுப்பிரமணியக் குருக்களின் (கந்தசாமிகோயில், கோப்பாய்) மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-08-97 மாலை மாமங்கத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பூ. பூரணகீதசந்திரக்குருக்கள்
(மகன்)

(சி/1402)

## திருமதி நடராசா செல்லமுத்து

தெல்லிப்பழை தையிட்டிப் புலத்தை பிறப்பிடமாக கொண்ட திருமதி நடராசா செல்லமுத்து 26-08-97 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும். தவபாலசிங்கம், தனபாலசிங்கம், சிவ சுப்பிரமணியம், தவராசா (தபாலகம் தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத்தாயாரும், விசாலாட்சி, சாரதா தேவி, தயாமலர், திலகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜலக்சி, கஜரூபன், நிலக்ஷிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27-08-97 புதன் பிற்பகல் 1-00 மணிக்கு அன்னாரது தற்போதைய இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தவராசா
(மகன்)

வல்லை வீதி,
சங்கானை. (47393)

## ஆழ்வாப்பிள்ளை நமசிவாயம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

கரவெட்டி கிழக்கு, செட்டித் தெருவைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை நமசிவாயம் (மயில்வாகனம்) 26 - 08 - 97 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஆழ்வாப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் நான்காவது புத்திரனும், கமலக்கண்ணன், கமலநாதன், கல்யாணி, கமலராணி, கமலமோகன், ஞானக்கலை, மன்மதன், வரதன் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27-8-97 புதன்கிழமை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
கல்யாணி (மகள்)

[49239]

## கணபதிப்பிள்ளை மகேஸ்வரி

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேஸ்வரி காலமானார்.

இவர் பொன்னையா கணபதிப்பிள்ளை (பிரத்தியேக ஆங்கில ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற (சாலகர்) கந்தையா — நாகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சர்வேஸ்வரரூபி மற்றும் சர்வேஸ்வரஜோய், சர்வேஸ்வரலலிதா, சர்வேஸ்வரசெவ்வேள் (கிளை முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ. சங்கம்), சர்வேஸ்வர விமோஷனம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சர்வானந்தன் (முருகன் களஞ்சியம்,சாவகச்சேரி), கமலானந்தன் (வர்த்தகர்), மகேஸ்வரி (ஆசிரியை, யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி காலஞ்சென்ற மழவராயமுதலி, காலஞ்சென்ற பால சுப்பிரமணியம் மற்றும் பங்கயற்செல்வி (ஆஸ்திரேலியா), மங்கயற்கரசி (சிலாபம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சர்மிலா, சர்மிலன், சர்வன், சிறிவத்சலனி, சுலக்சனா, ஜனேசன், உமாஜினி, வஜனி ஆகியேரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற மயில்வாகனம், காலஞ்சென்ற இராகுப்பிள்ளை, காலஞ்சென்ற நல்லையா, கனகம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-8-97) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. சர்வேஸ்வரசெவ்வேள்
(மகன்)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [49237]

## மதகு புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 27

பல வருடங்களாக சேதமடைந்து கவனிப்பாரற்ற நிலையில் இருந்த நல்லூர் அரசடி 1 ஆம் ஒழுங்கை மதகு தற்போது புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

(இ-15)


**எமது புதிய வெளியீடு!**

ஜெயராமன், தேவயாணி
★ **பெரிய இடத்து மாப்பிள்ளை**

சத்தியராஜ், அஜித்
★ **பகைவன்**
[ஒறிஜினல்]

என்றும் தரமான CD பதிவுகளுக்கு

**சுப்பஸோ வீடியோ யாழ்ப்பாணம்**

[சி/1406]



**D M. I**

233, ஸ்ரான்லி வீதி, யாழ்.

**AL 98**

**கணக்கீடு**

பிரத்தியேக வகுப்பு

**D. SAM**

ஆரம்பம்:

**30 - 08 - 97**

சனி காலை 8 மணி
(பழைய நேரம்)

★ குறிப்பை பகல் நேரத்தில் விளம்பரப் பலகையில் பார்க்கவும்.

D. SAM

(சி-1398)



**தென் இந்திய திருச்சபை**

யாழ். ஆதீனம்

**நம்பிக்கை இல்லம் [HOUSE OF HOPE]**

**உடல்ஊன முற்றோர் இல்லம்**

மேற்படி இல்லத்தில் கல்வி கற்க உடல் ஊனமுற்ற சிறுவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவோர் அதற்கான விண்ணப்பம், தமது கிராமத்தில் உள்ள கிராம சேவையாளர், சமாதான நீதிவான் அல்லது மதத் தலைவருடைய சிபார்சுக் கடிதம் ஆகியவற்றுடன் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

திட்டப்பணிப்பாளர்,
தென் இந்திய திருச்சபை
வட்டுக்கோட்டை.

[C-1408]



**யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

**40 வீத கழிவுடன் மலிவு விற்பனை**

சமாச இருப்பில் உள்ள சில புடைவை வகைகள் விற்றுத் தீர்க்கும் முகமாக விசேட கழிவு விலைகளில் விற்பனைக்குள்ளன. இவற்றை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு முன்புறம், பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தின் நல்லூர் மத்தி கிளை இல - 12 இன் கட்டடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட விற்பனை நிலையத்திலும், சமாசப்பணிமனையிலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யலாம்.

**பொது முகாமையாளர்,**
யாழ். மாவட்ட விவசாயஉற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

இல - 111, பிரதான வீதி.
யாழ்ப்பாணம். (சி/ 1403)


உ
சிவமயம்



**காரைநகர், கருங்காலி**

# போசுட்டி முருகமூர்த்தி ஆலய

## அந்தரித பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

குகநேயச் செல்வர்காள்!

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் ஆவணி மாதம் 13 ஆம் நாள் (29-08-1997) வெள்ளிக்கிழமை காலை 7-32 மணி முதல் 9-00 மணி வரை நிகழும் கன்னி லக்கின சுபவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளதால் அடியார்கள் அனைவரும் விழாக்காலங்களில் வருகைதந்து இறைவனைப் பிரார்த்தித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

★ **கிரியா விவரம்**

**ஆவணி 11 ஆம் நாள் (27-8-97) புதன்கிழமை**
மாலை அனுக்ஞை, கிராமசாந்தி, பிரவேச பிரி, வாஸ்துசாந்தி

**ஆவணி 12 ஆம் நாள் (28-8-97) வியாழக்கிழமை**
காலை 7.00 மணிமுதல் அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், யாக பூசை
மாலை 3.00 மணிமுதல் பிம்பசுத்தி, நியாசம்

**ஆவணி 13 ஆம் நாள் (29-8-97) வெள்ளிக்கிழமை**
காலை 6.00 மணிமுதல் விசேட பூசையைத் தொடர்ந்து கும்பாபிஷேகம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வள்ளி தெய்வானை சமேதராக ஸ்ரீ முருகப்பெருமான் மாலை 3 மணியளவில் திருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

★ சிறப்புச் சொற்பெழிவு ★

**விடயம்: "ஆறுமுகம் ஆனபொருள்"**

நிகழ்த்துபவர்:

**பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை** அவர்கள்
[பிரதி அதிபர், காரை. இந்துக் கல்லூரி]

கருங்காலி,
காரைநகர். **ஆலய நிர்வாகத்தினர்**

[49238]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னர் சிஹானூக் நாடு திரும்புகின்றார்

## கம்போடியாவில் சண்டை நீடிப்பு

நொம்பென் ஓக. 27

சுகவீனமுற்ற நிலையில் கடந்த ஆறு மாத காலமாக சீனாவில் மருத்துவச் சிகிச்சை பெற்று வந்த கம்போடிய மன்னர் நொரடோம் சிஹானூக் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடு திரும்புகிறார்.

தமது புதல் வரும் முதலாவது பிரதமருமான நொரடோம் றணரித் மீண்டும் பதவியில் அமர்த்தப்படும் வரை தாம் கம்போடியா திரும்பப் போவதில்லை என்று மன்னர் சிஹானூக் அறிவித்திருந்தார்.

எனினும் கம்போடியாவின் இரண்டாவது பிரதமரும் தற்பொழுது நாட்டைக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பவருமான ஹூன் சென் சீனா சென்று அவரைச் சந்தித்ததை அடுத்து சிஹானூக்கின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

இரண்டாவது பிரதமர் ஹூன்சென் முதலாவது பிரதமர் பதவிக்கு தனது வெளிவிவகார அமைச்சரை நியமித்திருப்பது தெரிந்ததே.

இளவரசர் றணரித் பிரான்ஸில் தங்கி இருந்த படி தனது நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடி ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதே சமயம் கம்போடியாவின் வட பகுதியில் றணரித் ஆதரவுப் படைகளுக்கும் ஹூன்செனின் கம்போடிய அரச படைகளுக்கும் இடையில் தொடர்ந்து கடும் சண்டை நடப்பதாகச் செய்தி ஸ்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

றணரித் ஆதரவுப் படைகளுடன் கெமர் ரூச் படைகளும் போரில் இணைந்து கொண்டிருப்பதால் கம்போடிய அரச படைகள் எதிர்பார்த்த வெற்றியை ஈட்டுவதில் தாமதம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து எல்லைப் பகுதியில் உள்ள கம்போடியாவின் வட பகுதியில் உள்ள தனது படைகளுடன் இணைந்து கொள்ளப் போவதாக இளவரசர் றணரித் முன்னர் அறிவித்திருந்தார்.

ஆனால் அவர் இன்னும் பிரான்ஸிலேயே தங்கி உள்ளார். (இ)

# மேற்கு வங்க மாநிலத்தில் பெரும் கடற் பெருக்கு!

## 20 கிராமங்கள் நீரில் மூழ்கின

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தின் கரையோரப் பகுதிக்குள் திடீரெனக் கடல் நீர் புகுந்ததால் பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கடல் அலைகள் ஆர்ப்பரித்து தடுப்பு அணையை அடித்துக் கொண்டு கரையோரப் பகுதிகளுக்குள் புகுந்தது. அச் சமயம் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த 40 மீனவர்கள் காணாமற் போய்விட்டதாக அஞ்சப்படுகிறது.

மேற்கு வங்க மாநிலத்தின் தென்பகுதியில் உள்ள உல்லாசநகரம் அமைந்த பகுதியில் பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கடல் அலைகளில் இருந்து அந்த நகரத்தைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கருங்கல் அணைக்கட்டின் பெரும் பகுதி அலைகளால் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் வெளிநாட்டவர் ஒருவர் உட்பட மூன்று உல்லாசப் பயணிகள் காணாமற் போயினர்.

கடந்த வியாழன் இரவும், வெள்ளி காலையிலுமாக இரு தடவைகள் இப்பகுதியை பெரும் வெள்ள அலைகள் தாக்கியதாக வெள்ளக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த கடற் பெருக்கினால் 19 கிராமங்கள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மேலும் 22 கிராமங்கள் வெள்ளக் காடாக மாறியுள்ளன. முக்கிய வீதிகள் பல வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன.

மேற்கு வங்கத்தில் கடந்த 15 ஆண்டுகளில் முன் எப்போதும் ஏற்பட்டிராத ஓர் அனர்த்தம் இது என்று சொல்லப்படுகிறது. (ஐ)

## 'ருட்சி' அகதிகள் 125 பேர் படுகொலை

றுவாண்டா நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த அகதி முகாம் ஒன்றுக்குள் 125 அகதிகள் கடந்த சனியன்று படுகொலை செய்யப்பட்டிருப்பதாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அறிவித்துள்ளது.

ஆயுதங்கள் சகிதம் வந்த சிலர் அகதிகளைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இச் சம்பவத்தில் 30 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

முன்னாள் ஸயர் நாட்டைச் சேர்ந்த ''ருட்சி'' இன அகதிகள் அந்த முகாமில் தங்கியிருந்தனர்.

# புகைப்பிடித்தலுக்கு எதிரான சர்வதேச மாநாடு பீஜிங்கில்!

பீஜிங், ஓக. 27

புகைப் பிடித்தலுக்கு எதிரான சர்வதேச மாநாடு ஒன்றுக்காக 100 – க்கும் அதிகமான நாடுகளிலிருந்து அறிவியலாளர்களும் பொதுநலத் துறை வல்லுநர்களும் சீனத் தலைநகர் பீஜிங்கில் கூடியுள்ளனர்.

'புகைப்பிடித்தலால் ஏற்படும் அகால மரணங்களும் வலுவிழப்புக்களும்' என்ற உலகளாவிய பரவல் நிலை பற்றி ஆராய்வதே இந்த மாநாட்டின் குறிக்கோள்.

சீனப் பிரதமர் ஜியாங் செமின் மாநாட்டின் முதலாவது கட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

தற்போதைய போக்குகள் மாறாமல் நீடிக்குமேயானால் இன்னும் 30 ஆண்டுகளில் புகையிலையைப் பயன்படுத்துவதால் இறப்பவர்களின் எண்ணிக்கை மும்மடங்கு அதிகமாகும் என அறிவியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

வளரும் நாடுகளை புகைப் பழக்கத் தொடர்புடைய நோய்கள் தாக்கும் போது தற்போது இக்காரணங்களால் ஆண்டு ஒன்றுக்கு இறப்பவர்கள் எண்ணிக்கையான 30 இலட்சம், ஒரு கோடி ஆக உயரும் என மாநாட்டில் பங்குபற்றியவர்கள் தெரிவித்தனர். (இ-5)

# காஷ்மீர் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்து வைக்க அமெரிக்கா விருப்பம்

வாஷிங்டன், ஓக. 27

இந்திய – பாகிஸ்தான் எல்லை மோதலுக்குத் தீர்வு கண்டு சமரசம் செய்து வைக்கத் தயார் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இரு நாடுகளும் கேட்டுக் கொண்டால் மத்தியஸ்தம் வகிக்க விரும்புவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்பது அமெரிக்காவின் நீண்ட கால விருப்பம் என்று வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வழமைக்கு மாறாக காஷ்மீர் பகுதியில் பதற்றம் நிலவுவதாகப் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான காஷ்மீர் எல்லையில் கடந்த சிலதினங்களாக இடம்பெற்ற மோதல்களில் 50–க்கும் மேற்பட்ட இந்திய – பாக். எல்லைப் படையினர் உயிரிழந்தது தெரிந்ததே.

காஷ்மீர் பிரச்சினையை 1972 சிம்ளா ஒப்பந்தத்தின் படி தீர்த்து வைக்கவேண்டும் என்று இந்தியா கோருகிறது.

காஷ்மீர் எந்த நாட்டுடன் இணைய வேண்டும் என்பது குறித்து ஐ.நா.ஏற்பாட்டின் படி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் கோருகிறது.

காஷ்மீருக்காக இந்தியாவும் பாகிஸ்தானும் இதுவரை இரு யுத்தங்களை நடத்தி உள்ளன. (இ-5)

# கபீலாவின் படையினர் அகதிகளைக் கொல்லவில்லை

## தென்ஆபிரிக்க அதிபர் தெரிவிப்பு

கின்ஸாசா, ஓக. 27

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் (முன்னாள் ஸயர்) நடத்தப்பட்ட றுவாண்டா அகதிகள் படுகொலைகளில் அதிபர் லோறன்ற் கபீலாவின் படைகள் எந்தப்பங்கும் வகிக்கவில்லை.

மேற்கண்டவாறு தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார்.

இது குறித்து கபீலாவின் படைகளைச் சந்தேகிக்க எந்தவித ஆதாரங்களும் இல்லை என்றும் அவர் கூறினார்.

மேற்படி படுகொலைகளை விசாரிக்க ஐ. நா. அதிகாரிகள் குழு கொங்கோவுக்குச் சென்றிருப்பது தெரிந்ததே.

தமது படைகள் றுவாண்டா ஹூட்டு அகதிகளைக் கொலை செய்வதாக வெளி வந்த செய்திகளை கபீலாவும் மறுத்துள்ளார்.

முபுட்டுவுக்கு எதிரான உள்நாட்டுப் போரில் கபீலாவின் படைகளுக்கு ருட்சி இனப் போராளிகள் உதவி செய்தது தெரிந்ததே.

கொங்கொ ஜனநாயகக் குடியரசின் அண்டை நாடான றுவாண்டாவில் ஹூட்டு — ருட்சி இனத்தவர்களிடையே நீண்ட காலமாகப் பகைமை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பொஸ்னிய ராணுவம் பிளவுபடும் ஆபத்து

பொஸ்னிய சேர்பிய குடியரசில் நடந்து கொண்டிருக்கும் அதிகாரப் போராட்டம் காரணமாக அந்நாட்டு இராணுவம் இரண்டாகப் பிளவுபடும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

அந்தக் குடியரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபரும், அதற்கு முன்னர் பதவி வகித்த றடோவின் கரவீச்சும் ஒருவரையாருவர் எதிர்த்து நிற்கின்றனர்.

றெடோவின் கரவீச்சுக் கெதிராக போர்க் காலக்குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. (இ-5)

## உலக அரங்கில்

### விமான விபத்தில் பலி!

ஆப்கானிஸ்தானின் மத்திய பகுதியில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற விமான விபத்தில் தலிபான் எதிர்ப்புக் கூட்டணியின் பிரதமர் அப்துல் ரஹீம் கபூர் ஸாய் உட்பட 17 பேர் பலியாகினர்.

தலிபான் கெரில்லாக்களால் வெளியேற்றப்பட்ட காபூல் அரசாங்கத்தில் வெளிநாட்டமைச்சராகப் பதவி வகித்த இவர் கடந்த 13 ஆம் திகதியே எதிர்க்கட்சிப் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். (ஐ)

### பங்களாதேஷில் பூரண ஹர்த்தால்

டாக்கா, ஓக. 27

பெற்றோலியப் பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து எதிர்க் கட்சிகள் நடத்திய ஹர்த்தால் காரணமாக பங்களாதேஷ் எங்கும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

பங்களாதேஷ் தேசியக்கட்சி அழைப்பு விடுத்திருந்த இந்த ஹர்த்தாலின் போது தலைநகர் டாக்காவில் வன்செயல்கள் இடம்பெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (ஐ)

# அயல் நாடுகளுக்கு சீனா அச்சுறுத்தலாக இல்லை

## சீனப் பிரதமர் லீபெங் தெரிவிப்பு

சீனா அதன் அயல் நாடுகளுக்கு இராணுவரீதியில் ஓர் அச்சுறுத்தலாக விளங்கக் கூடும் என்ற கூற்றை பிரதமர் லீ பெங் மறுத்துள்ளார்.

இது முற்றிலும் ஆதாரமற்ற கூற்று என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டிருக்கும் லீ பெங் மேலும் கருத்து வெளியிடுகையில், சீனா சமாதானக் கொள்கையை கடைப்பிடிப்பதாகத் தெரிவித்தார்

# உயர் தேசிய இனம் ஒன்றை உருவாக்கும் ரகசியத் திட்டம்

## சுவீடிஷ் அரசுகள் செயற்படுத்தினவா?

சுவீடனில் உடல் நலிவும் இனக் கலப்பும் இல்லாத உயர் தேசிய இனம் ஒன்றை உருவாக்கும் இரகசியத் திட்டம் ஒன்றை 1935 க்கும் 1975க்கும் இடையில் ஆட்சியில் இருந்த அரசுகள் செயற்படுத்தி வந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

வலுக் குறைந்த மக்களைப் பெற்றெடுப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்ற சுவீடன் நாட்டு நோயாளிகளுக்கும் மற்றும் குரவல் இனத்தவர்களுக்கும் இரகசியமாகவும்; நிர்ப்பந்தமாகவும் இனவிருத்தித் தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன என்றும் —

அவ்வாறு உடல் வீரியம் துண்டிக்கப்பட்டவர்கள் சுமார் 60 ஆயிரம் பேர் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுவீடன் நாட்டு பிரபல பத்திரிகை ஒன்றின் புலனாய்வுக் கட்டுரையில் இத்தகவல்கள் வெளியாகி உள்ளன.

அரசின்இன விருத்தித் தடைத் திட்டத்துக்கு இலக்கான - தற்போது உயிர் வாழும் - ஆயிரக்கணக்கான மக்கள் அரசுக்கு எதிராக பெரும் இழப்புத்தொகை கோரும் ஆபத்து இதனால் ஏற்பட்டுள்ளது என சுவீடன் நாட்டு மக்கள் நலவாரியம் அச்சம் தெரிவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திரத்து சந்தியிலுள்ள கடைகளை மீண்டும்இயங்கவைக்க நடவடிக்கை

## அங்குள்ள குடும்பங்களை வெளியேற்றக் கோரிக்கை

நல்லூர், ஓக. 27

யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்திக்கு தெற்குப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களை அந்த இடங்களில் இருந்து அப்புறப்படுத்தி உதவுமாறு யாழ். நகரக் கொமாண்டர் பிரிகேடியர் டி, பி. சுஸந்த மெண்டிஸிடம் யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் சி. நமசிவாயம் தலைமையில் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் பிரிகேடியரைச் சந்தித்தனர்.

'சத்திரத்துச் சந்திப்பகுதியில் உள்ள கடைகளை விரைவில் திறக்கவுள்ளதாகவும் —

அதற்கு வசதியாகவே கடைக்கட்டடங்களில் தங்கியுள்ள குடும்பங்களை வெளியேற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது எனவும் கூறப்பட்டது.

அத்துடன் யாழ். கன்னாதிட்டியில் நகைக்கடைகள் அமைந்துள்ள பகுதியில் சிமெந்து களஞ்சியப்படுத்தப்படுவதால் நகைக்கடைகளில் தூசி படிவதாகவும்

சிமெந்துக் களஞ்சியத்தை வேறு இடத்திற்கு மாற்றும்படியும் —

அதிகரித்த கப்பல்கட்டணங்களால் வர்த்தகர்கள் பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளதால் கப்பல் கட்டணத்தைக் குறைக்கும்படியும் —

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகை காலத்தில் பொது மக்கள் சிரமமின்றி வர்த்தக நிலையங்களுக்குச் சென்று வரக் கூடியதாக காங்கேசன் துறை வீதி பெரியகடை மின் சாரநிலைய வீதிச் சந்தியில் உள்ள வீதித்தடையை நீக்குமாறும் பிரிகேடியரிடம் கோரிக்கை விடப்பட்டது.

(இ-103)


# D. M. I.

233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A/L ஆசிரியர் குழு

| | |
|---|---|
| கணக்கீடு | – D. SAM |
| வணிகக்கல்வி | – B. பசில் |
| பொருளியல் | – R. இராஜேஸ்வரன் |
| வ. புள்ளிவிவரவியல் | – T. தவகேசர் |
| அளவையியல் | – T. மோகன் |

(சி/1397) D. SAM



## சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

### கணக்காய்வு தொடர்பானது

எமது சங்கத்தின் **01-07-1991 — 30-06-1992** வரையுமான நிதியாண்டுக்குரிய கணக்காய்வு நடைபெறுவதால் அது தொடர்பான வருமதி செல்மதிகள் தொடர்பில் சங்கத்துடன் தொடர்புகளை உடையவர்கள் தங்களது வருமதி செல்மதிகள் மீதிகளை இன்றிலிருந்து **05-09-1997** ஆம் திகதிக்குள் சங்கக் கடமை நேரத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். தவறும் சந்தர்ப்பத்தில் சங்கப் புத்தகங்கள் காட்டும் மீதிகளையே கணக்காய்வில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை தயவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொது முகாமையாளர்,**
சுன்னாகம் பனை தென்னைவள
அபி. கூ. சங்கம்.

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம். (சி/1401)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக முதன்மை ஆசிரியர்
**திரு வே. கயிலநாதன்**
அவர்களின் தாயார்
**திருமதி இராசமணி வேலுப்பிள்ளை**
அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திஅடையவும் பிரார்த்திக்கின்றோம்

**முதன்மை ஆசிரியர்கள்,**
**வலயம்1.**

(49232)



## கண்ணீர் அஞ்சலி

வடக்கு-கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய
**திரு. க. சண்முகலிங்கம்**
அவர்களின் மாமியார்
**திருமதி தையல்நாயகி சிதம்பரநாதர்**
அவர்களின் மறைவையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பொதுச்சபை உறுப்பினர்கள்,
ஊழியர்கள்.

**வலி-கிழக்கு தென்பகுதி**
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**நீர்வேலி.**

(சி/1404)


## சிறிசேனகூரே இந்தியா பயணம்

கொழும்பு, ஓக. 27

தடுப்புக்காவலில் இருந்து கடந்த வாரம் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் சிறிசேனகூரே குறுகிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்றுள்ளதாக பிரேமதாஸ நிலையப் பணிப்பளர்கள் தெரிவித்துள்ளனர்.

தடுப்புக்காவலில் இருந்த சமயம் அவரது நுரையீரல்களில் பங்கஸ் தொற்று ஏற்பட்டிருப்பதால் உடனடியாகப் பூரண மருத்துவ பரிசோதனை செய்யுமாறு டாக்டர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதை அடுத்தே அவர் இந்தியா சென்றுள்ளார்.

(ஐ)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.27

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி, ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா தினமும் மாலை 5.15 மணிக்கு நிகழ்த்திவரும் கந்த புராணம் தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று 'முதல்மரியாதை' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (இ-5)

## தெல்லிப்பழை அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.27

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு யூனியன் கல்லூரியில் நடைபெறும் என்று தெல்லிப்பழை கோட்டக் கல்வி அதிகாரி ஏ. கமலநாதன் தெரிவித்துள்ளார். (இ-5)


# D. M. I

233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 99**

சனி, ஞாயிறு பிரிவுகள்

**ஆரம்பம்:**
**30-08-97**

சனி காலை 8மணி
(பழைய நேரம்)

★ குறிப்பை பகல் நேரத்தில் விளம்பரப் பலகையில் பார்க்கவும்.

D. SAM

(சி/1399)


# கொலை நடந்த இடத்தை கழுவ சிறிசேனகூரே உத்தரவிட்டாரா?

## குற்றச்சாட்டுக்களுக்கு மறுப்பு

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த இடத்தை சுத்தம் செய்ததற்கும் தமக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்று முன்னாள் கொழும்பு மேயர் சிறிசேன கூரே தெரிவித்தார்.

பிரேமதாச கொலை இடம் பெற்ற கொழும்பு சந்திப் பகுதியை கழுவக் காரணமாக சிறிசேன கூரே இருந்தார் என்று பரபப்பப்படும் வதந்தி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற நேரத்தில் தாம் மேயராக இருக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

அதே நேரம் - கொலை இடம் பெற்ற இடம் கழுவப்பட்ட சம்பவம் குறித்து இரகசியப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(இ-100-3)

## பெப்ஸி சோடா திருடினராம்!

நல்லூர் கோயிலடிப் பகுதியில் அமைந்த கடைகளில்திருடியதாகக்கைதுசெய்யப்பட்ட இரண்டு சிறுவர்கள் நேற்று முன்தினம் யாழ். பொலீஸாரால் யாழ். நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.என். இராமச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை தலா 2,000ரூபா பிணையில் செல்ல நீதிபதி உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர்கள்பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

# சான்றுடன் நிரூபிப்பார்களா?

ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் தொட்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் திருடுதல், திருடிய பொருள்களை வைத்திருத்தல், விற்பனை செய்தல், வாங்கி வைத்திருத்தல் என்பன குற்றவியல் சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றங்களாகும். ஆனால் தற்போது திருடுதல் அங்கீகரிக்கப்பட்ட தொழில் போலத் தென்படுகிறது.

நாட்டின் செல்வம் செல்வந்தர்கள் அல்லர்; நல்ல பிரஜைகளே, ஆகவே திருட்டுத் தொழிலை முற்று முழுதாக ஒழித்துக்கட்டி மக்களை நல்ல பிரஜைகளாக்குவது அரசின் தலையாய கடமையாகும்.

இப்போது, கசிப்பு விற்பவர்கள் கழுத்தில் தங்கச் சங்கிலியும், குடித்தவன் கழுத்தில் கயிறும் என்றாகிவிட்டது. அது போல மீளக் குடியமர்ந்த மக்களின் இல்லங்களில் மாடு முதல், ஓடு வரையும் நிறைய இருக்கின்றன. தீவகம் உட்பட மீளக்குடியமர்ந்த மக்களிடம் இருக்கும் சகல தளபாடங்களையும் ரி. வி., டெக் உட்பட அவர்கள் சந்தேகமறத் தங்களுடையது என நிரூபிக்குமாறு கேட்க வேண்டும். தவறின் சகலதையும் பறிமுதல் செய்து அரசு உடைமையாக்க வேண்டும்.

வாசகர் திருமுகம்

தீவகத்திலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த போது அராலி வழியால் தங்கள் பிள்ளைகளையும், பெற்றோர்களையும் மற்றும் கையில் கொண்டு போகக்கூடியதை மாத்திரம் எடுத்துச் சென்றார்கள். ஏனைய பொருள்கள் எல்லாவற்றையும் விட்டுச் சென்றார்கள். பின் ஆறு வருடங்கள் கழித்து சென்று பார்க்கும் போது 1996 ஆம் ஆண்டு முற்பகுதியில் மீளக்குடியமர்ந்தவர்கள் இடம் பெயராமல் இருந்தவர்களிடம் புதிய புதிய பாவனைப் பொருள்கள் நிரம்பி வழிவதைக் காண முடிந்தது. அவர்கள் வீடுகளில் எப்படி இந்தப் பொருள்கள் வந்தன? ஏனைய வீடுகளில் சகல தளபாடங்களும் இல்லாமல் போன மர்மம் என்ன?

மீளக்குடியமர்ந்தவர்களிடம் இருக்கும் தளபாடங்கள் தங்களுக்குவந்த மார்க்கத்தையும் தங்களுடையன என்பதனையும் சான்றுகளுடன் நிரூபிக்குமாறு கேட்க வேண்டும். தவறின் பறிமுதல் செய்து அரசு உடைமையாக்க வேண்டும். பொருள்களைப் பறிகொடுத்த பலரின் சார்பில் இதனை யாழ். மாவட்ட பிரதி பொலீஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

சு. கதிரித்தம்பி

16/5, சீனியர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

# இளைஞர் வாழ்க்கையோடு விளையாடாதீர், வர்த்தகரே!

தற்பொழுது மாகாண அரசாங்க சேவையின் எழுதுநர் சார்ந்த சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்கான (1997) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த விளம்பரத்தின் 10.0 ஆவது விடயமான விண்ணப்பங்கள் என்ற உப தலைப்பில், விண்ணப்பங்கள் ஏ4 (21X29 செ.மீ) அளவில் தயாரிக்கப்பட வேண்டுமெனவும், இந்த அளவில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் தொடர்பில் ஏற்படும் இழப்புக்கு விண்ணப்பதாரரே ஆளாவார் என்றும் உள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள், பல இடங்களில் விற்பனையாகின்றன. பருத்தித்துறையில் உள்ள கடையில் எனது நண்பர் ஒருவரும் இப்படிவத்தை 5ரூபா செலுத்தி வாங்கினார். படிவ அளவை அளந்து பார்த்த பொழுது 20.5X33 செ. மீற்றர் அளவில் உள்ளது. இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் சம்பந்தப்பட்ட மானிடப் பிறவிகள், இவ்வாறான விடயங்களில் மிகவும் அக்கறையுடன் நடந்து கொள்வார்களா?

இப்படிவத்தை வாங்கி விண்ணப்பிக்கும் திறமையுள்ள அப்பாவி இளைஞர், யுவதிகளின் நிலை என்ன? வர்த்தகர்கள் தாங்கள்இவ்வாறான படிவங்களைக் கொள்வனவு செய்யும் போது பொறுப்பானவர்களிடம் வாங்குவார்களா? இது ஒரு சமுதாயத் துரோகம் அல்லவா?

யாழ். நகரில் உள்ள பிரசித்தி பெற்ற ஒரு நிறுவனத்தில் வாங்கப்பட்ட படிவத்தில், பல விடயங்கள் குளறுபடியாக உள்ளதை அவதானிக்க முடிகிறது.

விண்ணப்பதாரிகளே ஏமாறாதீர்கள்!

அ. ம. செபஸ்ரியன்

புலோலி,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைப்போர் தொடர்வதையே யாழ். மக்கள் விரும்புகின்றனர்

## புளொட் பிரமுகர் கூறுகிறார்

புலிகளுக்கு எதிரான போக்கை கொண்டிருப்பினும் உரிமைகள் கிடைக்கும்வரை போராட்டம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்றே வடபகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் அரசுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் யுத்தம் மக்கள் இல்லாத பகுதிகளில் நடத்தப்படவேண்டும் என்றும் அவர்கள் விரும்புகின்றனர்.

'புளொட்' இயக்கத்தின் உப தலைவரும் அதன் இராணுவப் பொறுப்பாளருமான மாணிக்கதாஸன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளியாகும் தமிழ் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சுமார் 70 வீதமான அளவுக்கு இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது. ஆனால் அங்குள்ள அரச திணைக்களங்களின் செயற்பாடுகளின் தரம் இன்னும் உயரவேண்டி உள்ளது. தபால், போக்குவரத்து, தொலைத்தொடர்பு ஆகிய துறைகளில் பெருமளவு குறைபாடுகள் காணப்படுகின்றன —என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

### திருமலையில் சிக்கியுள்ள

# 109 மாணவர், ஆசிரியர்களை அழைத்துவருவதற்குஏற்பாடு

மாகாண தமிழ் மொழித் தினப்போட்டிகளிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்ற திருகோணமலை சென்று யாழ்ப்பாணம்திரும்ப முடியாத நிலையில் திருகோணமலையில் தங்கியிருந்த ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட 109 பேர் நேற்று பொலீஸ் பாதுகாப்புடன் பஸ்ஸில் மன்னாருக்குஅழைத்துச் செல்லப்பட இருந்தனர்.

இவர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை ''தராகி'' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்ப ஏற்பாடு செய்து தருவதாக மன்னார் அரச அதிபர் திருகோணமலை பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார். [உ5-10-3]

# கிராம அலுவலர்பரீட்சையில் மோசடிகள் எனமுறைப்பாடு

கொழும்பு, ஒக. 27

கிராம அலுவலர்களை ஆட்சேர்ப்பது தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பாக 600 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### முடிவுகளை வெளியிடுவது தாமதம்

கடந்த வருடம் நடத்தப்பட்ட இப்பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு இதுவே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக தனித்தனியாக விசாரித்து முடிவுகள் எடுக்கப்படும் வரை இந்தப் போட்டிப் பரீட்சையின் முடிவுகளை வெளியிடுவதில்லை என பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு 20ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். [ஐ-10]

## துர்க்கை அம்மன் கோயில் புனரமைப்பு

நல்லூர், ஒக. 27

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்பாள் கோயில் புனரமைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பல அடுக்குகள் கொண்ட இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் –

செப்ரெம்பர் 7 ஆம் திகதி கும்பாபிஷேக விழா நடைபெறும் எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

சுமார் முப்பது லட்சம் ரூபா செலவில் ஆலய புனரமைப்புப் பணிகள் இடம் பெறுவதாக அறங்காவல் சபைத் தலைவர் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார், (இ-103)

# கொழும்பு நகருக்கு வரும் வாகனங்களுக்கு வரி!

## அமைச்சர் பௌசியின் திட்டம்

கொழும்பு நகருக்கு நுழையும் அனைத்து தனியார் வாகனங்களும் அடுத்த ஜனவரி மாதத்திலிருந்து ஒரு ரூபாயை வரியாகச் செலுத்த வேண்டும் என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் கிடைக்கும் நிதி நெடுஞ்சாலைப் பராமரிப்புக்குப் பயன்படுத்தப்படும் என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ,எச். எம். பௌசி தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு சுமார் 52 ஆயிரம் தனியார் வாகனங்கள் கொழும்பு நகருக்குள் பிரவேசிப்பதாகவும் இதனால் கொழும்புநகருக்குள் தினமும் போக்குவரத்து நெரிசல் இடம்பெறுவதாகவும் அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

கொழும்பு நகருக்குள் பெரும் எண்ணிக்கையிலான வாகனங்கள் வருவதால் நெடுஞ்சாலைகள் பழுதடைவதாகவும் எனவே அவற்றை பராமரிக்க பெருமளவு நிதி தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ஐ-10]

# சைவ சமயத்தை வளர்ப்பதற்கு நிறுவனரீதியான அமைப்புத் தேவை

## நல்லை ஆதீன பீடாரோஹண விழாவில் வலியுறுத்து

நல்லூர், ஒக. 27

முன்னர் சைவசமயத்தை வளர்க்கும் நிறுவனமாக ''இந்து போர்ட்'' இருந்தது. இன்று எமது சமயத்தை வளர்க்க நிறுவன ரீதியிலான அமைப்புக்கள் தேவை. நல்லை ஆதீனமும் இந்து சமயப் பேரவையும் இந்தப் பணியை ஓரளவு நிறைவேற்றிவருகின்றன.

நல்லை ஆதீனத்தின் 32 ஆவதுபீடாஹரோணவிழாவிலும்இந்து தர்மம் வெளியீட்டு நிகழ்விலும் கலந்து கொண்டு பேசிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லை ஆதீனத்தில் இடம் பெற்ற இவ்விழாவில் துணைவேந்தர்பாலசுந்தரம்பிள்ளை பேசுகையில் மேலும் கூறியதாவது:–

சைவசமயத்தைச் சேர்ந்த அனேகருக்குத்தேவாரம்ஓதத் தெரியாத நிலை இருக்கிறது. சமயத்தைப் பொறுத்தவரை நிறுவன ரீதியான அமைப்புக்களின் செயற்பாடுகளால் மக்கள் அதன் பண்பாடுகளை ஓரளவாவது பின்பற்றக் கூடிய நிலை உருவாக்க முடியும். சைவசமயம் கூறும் நெறிகளைக் கடைப்பிடித்தால் மட்டுமே எமது சமயம் நிலைத்து நிற்க முடியும்.

பாளி - புத்தமதக் கல்விக்கென தெற்கில் தனித்தனி பல்கலைக்கழகங்கள் உண்டு. களனியுடன் இணைந்ததான உயர்கல்வி நிலையம் உண்டு. இங்கு சைவம் – சமஸ்கிருதம் சேர்ந்ததாக யாழ். பல்கலைக் கழகத்துடன் இணைந்த ஆனால் தனித்ததாக இருக்கும் ஒரு நிறுவனத்தை அமைக்குமாறு மக்கள் வற்புறுத்த வேண்டும். பல்கலைக்கழகம் வேண்டுமென யாழ். மக்கள் போராடியதாலேயே கிழக்கிலங்கை ராஜரட்டைப் பகுதிகளுக்கும் பல்கலைக்கழகங்கள் கிடைத்தன,

பிரிவேனாக்களில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் பணம் கொடுக்கின்றது. அதேபோன்று ஆதீனத்தில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் அரசாங்கம் பணம் கொடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட வேண்டும். மக்களின் வலுவான கோரிக்கைகள் நிச்சயம்வெற்றி பெறும்.

இந்தியாவில் ஆதீனங்கள் அளப்பெரும் பணியாற்றுகின்றன. சைவமும் தமிழும் வளர அவர்கள் ஆற்றும் பணி போன்று நல்லை ஆதீனமும் பணியாற்றுகிறது. எனினும் அங்குள்ளது போன்ற பொருளாதார வளங்கள் நமது ஆதீனத்தில் இல்லை, அதனால் அதனுடைய சமய, சமூகப்பணிகளை பரந்த அளவில் மேற்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. பொது மக்கள் ஆதீனப் பணிகளுக்கு உதவ வேண்டும்.

சைவமதத்தின் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் எம்மக்கள் புரிந்து கொள்ளத் தக்கதாக 'இந்து தர்மம்' சஞ்சிகையை இந்து சமயப் பேரவை வெளியிட்டு வருகிறது. தமிழில் நிறைவான பழந்தமிழ் நூல்கள் உள. எனினும் இன்றைய தலைமுறையினர் அவற்றைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது. சமயக் கருத்துக்களை இலகுவாகப் புரிந்து கொள்ளத்தக்க நூல்கள் வெளிவர வேண்டும் - என்றார்.

இந்து சமய விவகார உதவிப் பணிப்பாளரும், இந்து சமயப் பேரவை உதவித் தலைவருமான ஆ. மகாலிங்கம் தமது தலைமை உரையில் கூறியதாவது:

அன்று சமய குரவர்கள் இல்லாவிடில் எமது கோயில்கள் சமணப்பள்ளிகளாகவே மாறியிருக்கும். பொலன்னறுவை முதல் களனி வரை பரவியிருந்த இந்து மதம் இன்று அப்பகுதிகளில் இல்லை, இந்தோனேசியாவில் எமது மதம் அழிந்து கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்கள் வளர்ந்துள்ளன. முன்னர் சிங்கள மன்னர்கள் கூட இந்து சமய நெறிமுறைகளுக்கு அமையவே ஆட்சி நடத்தி வந்துள்ளனர். எமது சமய ஞானிகள் காட்டிய வாழ்க்கை நெறிகளை நாம் கட்டிக் காக்கவேண்டும்.

இந்து சமயப் பேரவையும் மக்கள் மயப்படுத்தப்பட்ட இயக்கமாகமாற்றவுள்ளோம். நல்லை ஆதீனப் பணிகளுடன் இணைந்து தொண்டாற்ற வேண்டும் என்பது எமது எண்ணம். அதன் வெளிப்பாடாகவே பீடாரோஹணவிழாவுடன் இணைந்து 'இந்துதர்மம்' வெளியீட்டு விழாவும் நடத்தப்படுகிறது - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தனது ஆசியுரையில் குறிப்பிட்டதாவது:-

நல்லைக் குருமணி அவர்களின் வழி காட்டலில் ஆதீனப்பணிகள் நடைபெறுகின்றன. இந்தியாவில் உள்ள ஆதீனங்களைப் போன்று தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றுவதுடன்கல்வி, மருத்துவ வசதிகளையும் மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என முதலாவது குருமகாசன்னிதானம் அவர்கள் எண்ணியிருந்தார். பல்வேறு மக்கள் நலப்பணிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என திட்டமிட்டுள்ள போதும் அவற்றை நிறைவேற்றக் கூடிய வளங்கள் இல்லை. பொதுமக்கள் உதவும் பட்சத்தில் அவரது சிந்தனைகள் செயல்வடிவம் பெறும் - என்றார்.

பிரம்மஸ்ரீ த. மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

முன்னதாக இடம்பெற்ற பீடாரோஹண விழாவில் விசேட ஆராதனைகள் நடைபெற்றன. இரண்டாவது குருமகா சன்னிதானத்திடம் அடியார்கள் விபூதியும் ஆசீர்வாதமும் பெற்றனர்.

இந்து தர்மம் நூலின் முதல் பிரதியை துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளையிடம் இருந்து திரு. சற்குணசிங்கம் பெற்றுக் கொண்டார்.

நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற பயிற்சி நெறிகளில் கலந்து கொண்ட மாணவிகளுக்கான சான்றிதழ்களை நல்லை ஆதீன முதல்வர் வழங்கினார். (இ-103)

# மின்சாரக் கட்டணம் குடாநாட்டில் உயர்வு!

யாழ்ப்பாணம், ஒக. 27

குடாநாட்டில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மின்கட்டணம் உயர்த்தப்படவிருக்கிறது.

இதுவரை காலமும் மின்கட்டணமாக 30 யூனிட்டுகளுக்கு 55 ரூபா அறவிடப்பட்டு வந்தது.

இனி 30 யூனிட்டுகளுக்கு 66 ரூபா அறவிடப்படும் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை மின்சாரசபை மின் கட்டணத்தை உயர்த்தி இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# ஆறு மாதங்களாக தூங்கும் ஜெனரேற்றர்

## இணைப்புக்கு நிதி இல்லை

வட்டுக்கோட்டை, ஒக. 27

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு மின்சாரம் வழங்க வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட புதிய ஜெனரேற்றர் கடந்த ஆறுமாத காலமாக பொருத்தப்படாது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நோயாளர் வார்ட்டுகள், பிரசவ வார்ட்டுகள் கொண்ட மேற்படி வைத்தியசாலையில் இரவு நேரங்களில் ஏற்படும் சிரமங்களைக் கருத்திற் கொண்டே பிரதேச செயலகத்தால் இந்த ஜெனரேற்றர் வழங்கப்பட்டது.

போதிய நிதி இன்மையாலேயே ஜெனரேற்றரை இணைத்து மின்சாரம் வழங்க முடியாத நிலை இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (இ-12)

## மின்மாற்றி சேதம்

பாண்டிருப்பில் குறித்த நேரத்தில் வெடிக்கக் கூடிய குண்டு ஒன்று வெடித்ததில் மின்மாற்றி ஒன்று பலத்த சேதமடைந்தது. (உ-5)

# முகமாலை வரை பஸ் சேவை விஸ்தரிப்பு

தென்மராட்சி, ஒகஸ்ட் 27

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் தினமும் பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து எழுதுமட்டுவாள் வரை நடத்தும் பஸ்சேவை செப்ரெம்பர் முதலாந் திகதி தொடக்கம் முகமாலை வரை விஸ்தரிக்கப் படவுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் க. சொக்கலிங்கம், டிப்போ அத்தியட்சகர் க. மணிவாசகம் ஆகியோருடன் பளைப்பகுதி பொது ஸ்தாபனங்கள் தொடர்பு கொண்டதையடுத்தே இப் பஸ் சேவை நீடிக்கப்படுவதாகவும்

முகமாலை தேவாலயத்தில் இரவு தரித்து நிற்கும் இப்பஸ் காலை 6. 30 மணிக்கு புறப்படுமெனவும்— தெரிவிக்கப்பட்டது.

தற்போது எழுதுமட்டுவாள் வரை சேவையில் ஈடுபடும் பஸ் இரவு தரிப்புக்காக மிருசுவில் தேவாலயத்திற்கு சென்று மீண்டும் காலை எழுதுமட்டுவாள் வரை வந்து அங்கிருந்து சேவை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஆண்டு 3 முதல் O/L வரை ஆவணி மாதப் பயிற்சிகள் எம்மிடம் பெறலாம். பரீட்சைப்பகுதி, BOND Institutes, யாழ்ப்பாணம். [49114]

CANNON AE1 (Program) கமரா விற்பனைக்குண்டு. தொடர்பு: 234/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [49224]

ஜன்மர் என்ஜின் (30 கோஸ் பவர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றியல் வீடியோ வித்தனையடி, உடுப்பிட்டி றோட், வல்வெட்டித்துறை. [சி/1393]

வேம்பு, பூவரசு, இப்பிலிப் பிலி முதலிய விறகுகளும், வைரமான பனைமரங்களும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். திருமதி செல்லம்மா, 16/5, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [49227]

## வீடு விற்பனைக்கு

பழம் றோட், கந்தர்மடத்தில் மூன்று அறைகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- 19, பழம் றோட், கந்தர்மடம். [49178]

## மலிவு விற்பனை

ஊர்காவற்றுறை சண்முக வித்தியாலயத்துக்கு அருகில் 10 பரப்பு காணி மலிவு விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. த. காசிநாதன், 3ஆம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். [49158]


## தவறிவிட்டது

சுதுமலை வடக்கைச் சேர்ந்த துரைராசா பாலேந்திரன் என்பவரது இலக்கம் 0905005622 விசேட அடையாள அட்டை, அல்லைப் பிட்டிக்கும் வேலணைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். கதிரவன் விற்பனைநிலையம், 144, சிறப்பு அங்காடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், (பஸ்தரிப்புநிலைய வைரவர் கோயில் அருகாமையில்). [49229]

மட்டுவில்மேற்கைச் சேர்ந்த கணேஸ் சர்மிளா என்பவரது 777302582V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை பிறவுண் வீதிக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்: பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [49231]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 24 - 04 - 1945

இறப்பு: 28 - 07 - 1997

## செல்வி இராசலெட்சுமி இராமநாதன்

தனக்காக வாழாது எவர்க்கும் துணையாக வாழ்ந்து அமரத்துவம் எய்திய நம் அன்புச் சகோதரியின் ஆத்மா சாந்திடையப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன.

சகோதரிகள்: திருமதி தே. ஆலாலசுந்தரம்
திருமதி தே. தவஞானம்
திருமதி ம. பாலசிங்கம்
திருமதி ஸ். சாந்தராஜா.

மைத்துனி: திருமதி க. தியாகராஜா.

400/1, நாவலர் வீதி,
அரியாலை.

(49082)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



உரும்பிராய் வடக்கு

## செல்லப்பா நடராசா

தோற்றம்:— 25 - 08 - 1907

மறைவு:— 28 - 07 - 1997

எங்கள் எல்லோரது வாழ்விலும் ஒளியூட்டி வைத்த தெய்வமே! உங்களை யாம் என்றும் மறவோம்.

தங்கள் ஆன்மா சாந்தியுறும் வண்ணம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரர், மக்கள்,
மருகர், பேரர்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(49228)

---

உ

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

இன்று (27 - 08 - 1997) புதன்கிழமை சுப முகூர்த்த வேளையில்

கைதடி வடக்கை சேர்ந்த
திரு. திருமதி சி. துரை
தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**நடராஜா (நடா)**
அவர்களுக்கும்



கோப்பாய் தெற்கை சேர்ந்த
திரு. திருமதி
மு. கனகராஜா
தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
**நிர்மலா (நிம்மி)**
அவர்களுக்கும்

திருமணம் நடத்த பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு
சுவிஸில் உள்ள ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் திருமணம் நடைபெறவுள்ளது.

திருமதி அரசரத்தினம்
இராஜேஸ்வரி

திருமதி மு. கனகராஜா
குடும்பத்தினர்.
கோப்பாய் மேற்கு, கோப்பாய்.

(49221)

---

# N.C.A. கல்வி நிறுவனம்

பருத்தித்துறை

பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு

## A/L 98

## DAY CLASS துரிதமீட்டல்

N. C. A. விஞ்ஞானப்பிரிவு கலை, வர்த்தகப்பிரிவு வழமையான ஆசிரியர்கள்.

**ஆரம்பம்: 28-08-97** வியாழன் 3 மணி

(49230) - நிர்வாகி

---

# D. M. I

**235, ஸ்ரான்லி வீதி: யாழ்.**

பகல் நேர வகுப்பு DAY CLASS

## A/L 98

**ஆரம்பம்:- 02 - 09 - 97** (செவ்வாய்)

காலை 8 மணி (பழைய நேரம்)

- ★ அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்
- ★ முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்
- ★ பழைய, புதிய பாடத்திட்டத்திற்கு வெவ்வேறு பிரிவுகள் நடைபெறும்.
- ★ இந்த ஆசிரியர் குழுவினர் யாழ். நகரில் வேறுஎந்தக் கல்வி நிலையத்திலும் கற்பிக்கமாட்டார்கள்.
- ★ இரண்டு பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

(சி-1397) D. SAM

---

# வாழ்த்துகின்றோம்

## ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை '95

## யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தோர் விவரம்:

| பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 1. ரி. ஐங்கரதாசன் | 167 |
| 2. கே. கிருத்திகன் | 165 |
| 3. ஆர். சிறிஜெயச்சந்திரா | 142 |
| 4. பி. பிரதீப்குமார் | 136 |
| 5. கே. நிருத்தனன் | 134 |
| 6. ஜே. சிந்துஜா | 115 |

இப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் இம் மாணவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து கற்றுக் கொடுத்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
**யா/கரணவாய்**
**தாமோதர வித்தியாலயம்**

[49226]

---

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை

சுழிபுரம்

## தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டம்

*1980 இன் இல: 47, 1988 இன் இல; 56*

மேற்படி சட்டம் இப்பிரதேசப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதைப் பகிரங்கப் படுத்துகிறேன்.

தொழிற்சாலைகள் அல்லது நிலையங்கள் ஏதாவதிலிருந்து கழிவுகள் தேங்கியிருப்பது, நீர், ஒளி, சத்தங்கள், வாயுக்கள் ஆகியன வெளியேறுவது போன்றவற்றிற்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வருடாந்தம் பெற்றுக் கொள்ள வேண்டும். சகல ஆலைகள், கல் உடைக்கும் இயந்திரம், வெதுப்பகங்கள், பண்ணைகள், சூளைகள், ஓட்டு வேலைத்தலங்கள், வாகனம் திருத்தும் சாலைகள், கடைச்சல் இயந்திர வேலைத் தலங்கள், அச்சகங்கள் முதலானவை அடங்குகின்றன.

மேலதிக விவரங்களை இந்தப் பிரதேச சபைத் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**கா. சந்திரராசா,**
விசேட ஆணையாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்,

(சி-1400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சர்வஜன வாக்கெடுப்பு

நாட்டின் அரசமைப்புச் சட்டம் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் திருத்தப்படும்.

கடந்த சில மாதங்களாக ஊகத்தில் இருந்து வந்த இத் தகவலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுராதபுரத்தில் வைத்துப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

நாட்டில் சகல சமூகங்களும் அமைதியான, சமாதான சூழலில் வாழ்வதற்கான அடித்தளத்தை இடுவதற்காகவே அரசமைப்புச் சட்டம் திருத்தப்படவுள்ளது. வடபகுதிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, சமாதானத்தை நிலைநாட்டுவது என்று அரசு உறுதி பூண்டுள்ளது — என ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இதன் பொருட்டு சகல இன, சமூக, சமய மக்களின் ஆதரவையும் அவர் கேட்டிருக்கிறார்.

ஆளுங்கட்சியான பொது மக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்றத்தில் பலவீனமாக உள்ளது. எனவே அரசமைப்பைத் திருத்துவதற்கு, இனப் பிரச்சினைக்கான தீர்வை நிறைவேற்றுவதற்கு, ஏனைய அரசியல் கட்சிகளின் பின்னால் திரிவதை விட, மக்கள் ஆதரவை நேரடியாகப் பெறுவதே உகந்த மார்க்கம் என்று அரச உயர்பீடம் நினைத்திருக்க வேண்டும்.

அரசமைப்புத் திருத்தத்திற்கு. அதிகாரப்பரவல் திட்டத்துக்கு, மக்கள் ஆதரவு அளித்துவிட்டால், அதன் பின்னர், அரசியல் கட்சிகள் எதிர்ப்பதோ, தடையாக இருப்பதோ கஷ்டமானதாகிவிடும்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை — அதன் முக்கிய அம்சங்களை — ஏற்க முடியாது என்று முரண்டு பிடிக்கும் எதிர்க்கட்சிகளை முடக்கி விடுவதற்கு ஜனாதிபதி கண்டுபிடித்த நல்ல உபாயம் என்றும் இதனைச் சொல்லலாம்.

உபாயம் கெட்டித்தனமானதாக இருக்கலாம். ஆனால் அந்த உபாயம் வெற்றி அடைவதில்தான் முழு விவகாரமுமே தங்கியுள்ளது.

மக்கள் கருத்துக் கணிப்பில் — சர்வஜன வாக்கெடுப்பில் — வெல்வதற்கு திறமையான பிரசாரமே முக்கியபங்கு வகிக்கும். அதுவும், இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமும் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படுவதால், சிங்கள மக்கள் தரப்பில் ஏனைய கட்சிகளின் தூண்டுதலால், பிரசாரத்தால் உண்டாகக் கூடிய எதிர்ப்பை முறியடிக்கும் சக்தி அரசுக்கு இருக்க வேண்டும்.

அதே வேளை, தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதானால், தீர்வு யோசனை, அவர்களின் நியாயமான, நீண்டகால அபிலாசைகளை நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும். அவை தெட்டத் தெளிவாக அமைந்திருப்பதும் முக்கியம்.

சர்வஜன வாக்கெடுப்பில் வெல்வதோ அல்லது அதன் மூலம் கிடைக்கும் முடிவை நடைமுறைப்படுத்துவதோ தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதில் தான் தங்கியுள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது.

ஆகையால் கருத்துக் கணிப்பில் வெல்வது என்பது நாடாளுமன்றத்தில் அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதனை விடக் கஷ்டமான காரியமாக மாறிவிடக்கூடும்.

எதற்கும், கருத்துக் கணிப்புக்காக மக்கள் முன்வைக்கப் படவுள்ள அரசமைப்புத் திருத்த நகலின் உள்ளடக்கம் எவ்வாறு அமையப் போகிறது என்பதிலேயே அரசின் முயற்சி வெல்லுமா? தோற்குமா? என்பது தங்கியுள்ளது.

## அம்பாறை பெண் கொலை: மரண விசாரணை நவ. 11க்கு

கொழும்பு, ஒக. 27

அம்பாறை மத்திய முகாம் கிராமத்தைச் சேர்ந்த குடும்பப் பெண்ணான கோணேஸ்வரி என்பவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், இடுப்புப்பகுதியில் கிரனேட் வெடிக்க வைக்கப்பட்டு கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான மரண விசாரணை நவம்பர் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கல்முனை நீதிமன்றத்தில் நீதிவான் அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் இந்த மரண விசாரணை நேற்று நடைபெற இருந்தது.

நேற்றைய விசாரணையில் சமுகமளிக்குமாறு மட்டக்களப்பு நடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை உதவி ஆசிரியர் எஸ். எஸ். செல்வநாயகம், ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அவர்கள் சார்பில் ஆஜரான கட்டத்தரணி என்.ஜே. பேரின்பநாயகம், அழைப்பாணை கிடைக்க முன்னர் ஜோசப் பரராஜசிங்கம் வெளிநாட்டுக்கு செல்ல திட்டமிட்டிருந்தார் என்றும் —

தற்சமயம் அவர் நாட்டில் இல்லை என்றும் —

'சண்டே ரைம்ஸ்' உதவி ஆசிரியர் செல்வநாயகம் சுகயீனம் காரணமாக இரு நாள்களாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் —

இதன் காரணமாக இருவரும் நீதிமன்றத்தில் சமுகமளிச்கமுடியவில்லை என்றும் — தெரிவித்தார்.

அதையடுத்து நீதிவான் விசாரணையை ஒத்திவைத்தார்.

(உ-21-3)

## தமிழ் தட்டெழுத்தாளர் நேர்முகப் பரீட்சை

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் தட்டெழுத்தாளர் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்புக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு எதிர் வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நேர்முகப்பரீட்சை நடைபெறவிருக்கிறது.

இப்பரீட்சையில் சித்தியடைந்த - 85 க்கும் 75 க்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்ற 42பேர் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

போக்குவரத்து வசதியில்லாதகாரணத்தால்கொழும்பு செல்ல முடியாது போன இவர்களுக்கு யாழ். செயலகத்தில் நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 4ஆம் 6ஆம் திகதிகளில் காலை 10 மணிக்கு நடைபெறும் என்றும்-

இவர்கள் முன்னர் அனுப்பப்பட்ட கடிதத்தில் கோரப்பட்டிருந்த சான்றிதழ்களின் மூலப் பிரதியை போட்டோ பிரதியுடன் கொண்டு வர வேண்டும் என்றும்- தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## சூராவத்தை மற்றும் உடுவில் சம்பவங்கள் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 27

கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் சூராவத்தையிலும் உடுவிலிலும் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து கடந்த ஞாயிறு நண்பகல் 12.00 மணி அளவில் சூராவத்தைப் பகுதியில் உள்ள குப்பைக் கிடங்கு ஒன்றில் இருந்து ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன.

ரி-56 ரக ஆயுதம் - 1, ரி-56 மகஸீன் - 1, ரி-56 ரக ரவைகள் - 15 ஆகியவையே கைப்பற்றப்பட்டவை ஆகும்.

★ கடந்த திங்கட்கிழமை பகல் 12.30 மணி அளவில் உடுவில் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் கைவிடப் பட்டிருந்த வீடு ஒன்றில் இருந்து நான்கு கிரனேட்டுக்களைக் கண்டெடுத்தனர். [இ]

## பிரிவுபசாரம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பணியாற்றி இளைப்பாறிய, இடமாற்றம் பெற்றுச்சென்ற ஏழு உத்தியோகத்தர்களுக்கு செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் பிரிவுபசாரவிழா இன்றுகாலை 10-00 மணிக்கு சங்கத்தலைவர் செ. முருகையா தலைமையில் நடைபெறும். (உ-117)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## அல்லல்தீர அருள்

இராகம்:- சாமா தாளம்:- ஆதி

பல்லவி

அருள் புரிவாய் முருகா - சண்முகா
அருள் புரிவாய் முருகா (அருள்)

அனுபல்லவி

உருகிடும் அடியார் உளம் உறைவோனே
கருணைக் கடலே கந்தா கடம்பா (அருள்)

சரணம்

அல்லல் தீரவும் அருவினை நீங்கவும்
தொல்லை வல்வினைத் தொந்தம் தொலையவும்
எல்லை இல்லாத இன்னருட் கடலே
நல்லைக் குமரா நந்தியின் மைந்தா (அருள்)

திருமுறைப் பண்ணிசைமணி
ப. சிவசுப்பிரமணியம்

## கருணை புரிந்திடுவாய்

எடுப்பு

கந்தா உன் தலம்நாடிக் கைதொழுதோம் கருத்துடனே
இந்தா என்றொருவரம் இசைவுடன் வழங்கிடுவாய்!

தொடுப்பு

பந்தாக அடிபட்டுப் பரிதவிக்கும் நிலைமாறச்
சிந்தாயோ உன்னருளைச் செப்பிடுவாய் நல்லூரா!

முடிப்பு

வேல் கொண்டுதேவர் வினைகளையப் பரமன்
சேல் மீண்டபொறிகளில் சேயாய் உதித்தவனே
சூல் கொண்டபகையோங்கி சோதனைகள் சூழ்ந்திங்கு
கால் கொண்ட போரோயக் கருணை புரிந்திடுவாய்!

சு. சி. சுந்தரம்பிள்ளை

## பார்வைக்கு விலைப்பட்டியல் வைக்குமாறு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 27

எதிர்வரும் முதலாம் திகதி முதல் குடாநாட்டில் உள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் அங்கு விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலைப்பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்படவேண்டும்.

யாழ். நகர இராணுவத் தளபதி மேற்கண்டவாறு சகல வர்த்தகர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளதாக யாழ். செயலக செய்திக் குறிப்பு தெரிவித்தது.

அதே நேரம் —

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் வர்த்தக நிலையங்களுக்கு விஜயம் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-3]

## வன்னியில் பிடித்த இடங்களில் பெண் பொலீஸார் - ராணுவம்?

கொழும்பு, ஒக. 27

வன்னியில் படையினர் கைப்பற்றிய பகுதிகளில் பெண் பொலீஸார் மற்றும் பெண் இராணுவத்தினரையும் கடமையில் ஈடுபடுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

கடந்த சனிக்கிழமை மோதல் நடைபெறும் புளியங்குளம் பகுதிக்கு சென்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையிடம் பெண் பொலீஸாரையும் கடமையில் ஈடுபடுத்தலாமே என படை அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்ததாகவும் -

இந்த யோசனை தொடர்பாக ஆராயலாம் என அமைச்சர் பதிலளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்கு வரத்தவறியோர் காரணத்தைஅறிவிக்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஒக. 27

குடாநாட்டில் காணமற்போனோர் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சினால் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது சமுகமளிக்கத் தவறியவர்கள் அதற்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டும். இப்படியானோர் காணமற்போனோரைக் கண்டறியும் விசாரணைக் குழு, பாதுகாப்பு அமைச்சு, கொழும்பு - 3 என்ற முகவரிக்கு உடனடியாக காரணம் தெரிவிக்கவேண்டும் என்று பலாலி வானொலி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டுப் பகுதியில் காணாமல் போனோர் பற்றிய தகவல்களை கண்டறிவதற்காக பாதுகாப்பு அமைச்சினால் நடத்தப்பட்ட விசாரணைகள் சென்ற 17 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளன.

இந்த விசாரணைகளின் போது சிலர் சமுகமளிக்கத் தவறியுள்ளனர். சிலருக்கு விசாரணை அழைப்புக் கடிதம் கிடைக்காததும் காரணம் எனத் தெரியவருகிறது.

மேலும் காணாமற்போனோர் சிலர் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாலும், சிலர் எவ்வித காரணமும் இன்றியும் இந்த விசாரணைகளின் போது சமுகமளிக்கவில்லை.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-4]

## சிப்பாய்கள் நால்வர் கைது

கொழும்பு, ஒக. 27

வடக்குக் கிழக்கு யுத்தப் பிரதேசத்தில் கடமையாற்றி, விடுமுறையில் தங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றவேளை கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கிகளின் பாகங்களை இரகசியமாகக் கொண்டுசென்று பாதாள உலகக் கும்பல்களுக்கு விற்று பணம் சம்பாதிப்பதில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நான்கு இராணுவச் சிப்பாய்கள் இராணுவப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

''லங்காதீப'' சிங்கள நாளிதழ் இத்தகவலை வெளியிட்டது. (உ-10)

## மூவருக்கும் பிணை

யாழ்ப்பாணம், ஒக. 27

கோப்பாயில் கடந்தவாரம் சட்டவிரோதமாக உப்பு அள்ளியதாகக் கோப்பாய் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட மூவர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மூவரையும் தலா 2,000 ரூபா பிணையில் செல்ல நீதிபதி ஏ.என். இராமச்சந்திரன் அனுமதியளித்ததை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (இ-15)

## சமய நிகழ்ச்சிகளில்

ஏழாலை புன்கடி அம்பலவாணேஸ்வரப் பெருமான் திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெறும். [உ-4]

★ ★ ★

குப்பிளான் சொக்கர்வளவு சோதிவிநாயகர் கோயிலின் மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அலங்கார உற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி 10 நாள்கள் நடைபெறும். [உ-4]

★ ★ ★

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாட்சி தோட்டத்து கற்பகப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி ஆவணி விநாயகர் சதுர்த்தி அன்று நிறைவுபெறும்.

மேற்படி உற்சவ காலத்தில் தினமும் விஷேட நிகழ்வாக ''விநாயகர் பெருமை'' என்னும் தொடர் தெய்வீக சொற்பொழிவு திரு. ந. சிவசண்முகமூர்த்தியால் நிகழ்த்தப்படும்.

★ ★ ★

சாவகச்சேரி சந்திரகேசர வாரிவனநாத சிவன்கோயில் லட்சார்ச்சனை விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் செப்ரெம்பர் ஏழாந் திகதி 1008 சங்காபிஷேகத்துடன் விழா நிறைவு பெறும்.

## நாளை

**ஆவணி 12**

வியாழக்கிழமை

திதி : ஏகாதசி
நள்ளிரவு 12.20 வரை.

**நட்சத்திரம்** : திருவாதிரை
மாலை 6.11 வரை.

ஏகாதசி விரதம்

**சுபநேரம்**: 7.35-9.05

**ராகுகாலம்**: 1.35-3.05

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிவன் ஆச்சாரி கார்த்திகா

சுன்னாகம் முருகன் ஆபரண மஹால் முருகன் ஆச்சாரியின் போர்த்தியும் ஓம் சக்தி நகைத்தொழிலகம் சிவன் ஆச்சாரியின் மகளுமான கார்த்திகா 26-08-97 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27-08-97 இன்று காலை 10 மணியளவில் இல-136 கஸ்தூரியார் வீதி இல்லத்தில் [உதயன் பணிமனை முன்பாக) நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
மு. சிவன் ஆச்சாரி
(தந்தை)
ஓம்சக்தி நகைத் தொழிலகம்,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

136, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(49240)

## திருமதி அருந்தவம் நடராசா

[ஒய்வு பெற்ற ஆசிரியர், யா/ ஒட்டுவெளி அ.மி.த.க. பாடசாலை]

ஒட்டுவெளி மிருசுவிலைச் சேர்ந்த திருமதி அருந்தவம் நடராசா 26-08-97 அன்று அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் க. நடராசா (அதிபர், யாழ். ஒட்டுவெளி அ.மி.த.க. பாடசாலை) அவர்களின் துணைவியாரும், ந. ரவீந்திரன் (சுவிஸ்), திருமதி சாந்தி செல்வராசா, ந. வசந்தி அவர்களின் தாயாரும், அ. செல்வராசா (விவசாயப் பணிப்பாளர், கிளிநொச்சி) அவர்களின் மாமியாரும், செ. சாஹித்தியாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 27-08-97 புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. க. நடராசா
[கணவர்]

ஒட்டுவெளி,
மிருசுவில்.

[49233]

## குமாரவேலு அம்பிகாநந்தன்

உரும்பிராயைச் சேர்ந்த குமாரவேலு அம்பிகாநந்தன் அவர்கள் 17 - 08 - 97 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி குமாரவேலு அவர்களின் அன்பு மகனும், திரு. திருமதி சீவரட்ணம் அவர்களின் பெறாமகனும், காலஞ் சென்ற சி. க. சபாபதி (சிறாப்பரும், கொக்குவில், கோண்டாவில் கிராம சபையின் முன்னாள் தலைவரும்), திருமதி கனகலட்சுமி சபாபதி அவர்களின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், குமணன், ராகவன், நிவேதித்தா, உமாசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. இராமச்சந்திரன் (மலேசியா), திருமதி அம்பிகா நேசதுரை (மலேசியா), திருமதி தவஜோதி கனகசபாபதி (இணுவில்), திருமதி பரமேஸ்வரி இராஜேந்திரம் (சாவகச்சேரி), திருமதி சிவஜோதி இராஜலிங்கம் (லண்டன்), திரு. கதிர்காமநாதன் (லண்டன்), திருமதி இரட்ணஜோதி ரமேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சற்குணதேவி, ராகவன் (நோர்வே), திரு. ராஜ்குமார் (லண்டன்), திருமதி சாரதாதேவி, பவாநந்தன் (ஆஸ்திரேலியா), திரு. சாந்தகுமார் (லண்டன்), திருமதி சுசீலாதேவி, ஐங்கரலிங்கம் (லண்டன்), திருமதி சபாநந்தி ரவீந்திரன் (கனடா), P. கனகசபாபதி (இணுவில்), செ. இராஜேந்திரம் (சாவகச்சேரி), V. இராசலிங்கம் (லண்டன்), R. ரமேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17-08-97 அன்று திருச்சியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
செ. இராஜேந்திரம்
(மைத்துனர்)

(உரும்பிராய்,
கோண்டாவிலில் வசித்தவர்)
''இராஜஸ்தான்'',
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(சி/1407)

**மேலும் மரண அறிவித்தல்கள்
இரண்டாம் பக்கத்தில்**

மீளக்குடியமர்ந்தோருக்கு உதவ

# வலி. வடக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

# ரூபா 8 லட்சம் செலவில் திருத்தப்படும்

யாழ்ப்பாணம், ஒக. 27

வலி - வடக்கில் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கு நுகர்ச்சிப் பொருள்கள் கிடைக்கும் வகையில் அப்பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எட்டுலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவிருக்கின்றன.

அளவெட்டி, தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கங்களின் கிளைக் கட்டடங்கள், அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றைப் புனரமைக்க இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்த நிதி மூலம் விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன,

அப்பகுதியில் உள்ள மக்கள் வைத்திய சேவை பெற வசதியாக தெல்லிப்பழை கூட்டுறவு ஆஸ்பத்திரிக் கட்டடத்தில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியை இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான கட்டடங்களை அமைக்க 15 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## பரீட்சை முடிவுகள்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரீட்சை மண்டபம் — 3, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட வித்தியாலயத்தின் பரீட்சை மண்டபம்— ஆகிய விசேட பரீட்சை நிலையங்களில் 96 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைகளுக்கு தோற்றியவர்களுக்கான பெறுபேறுப் புள்ளிகள் யாழ். நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளரான வ. தானையாவினால் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றை வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள கல்வித் திணைக்களத்தின் பரீட்சைக் காரியாலயத்தில் இன்று பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(உ-5-15)

## விசேட அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக. 27

யாழ். கோட்டை (ஜே/81) கொட்டடி (ஜே/83) கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான விசேட அடையாள அட்டை விநியோகம், குடும்பப் பதிவு, கடற்றொழில் அனுமதிப் பத்திர விநியோகம் போன்றன நாளை வியாழக்கிழமை காலை 8–30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கொட்டடி படை முகாமில் வைத்து மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-4)

## கடந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

தாங்கள்ஆராய்ந்ததாகவும் — 1996 ஜூலையில் யாழ். நகரில் விடுதலைப் புலிகள் நடத்தியதாகக் கருதப்படும் தற்கொலைத் தாக்குதலின் பின்னரே அவர்களில் பெரும்பாலானோர் காணாமல் போனதாகவும் —

சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில்

நீதிமன்ற விசாரணையின்றி விதிக்கப்பட்டதாகக் கருதப்படும் மரணதண்டனைகள் குறித்து விசாரிக்க ஐ. நாவின் விசேட பிரதிநிதி ஒருவர் இலங்கை வருகின்றார்.

இதேசமயம் —

இலங்கை வந்திருந்த — இங்கிறிட் மஸாஜ் அம்மையார் தலைமையிலான — மன்னிப்புச் சபையின் தூதுக்குழு கடந்த வார இறுதியில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதாக இருந்தது.

ஆனால் அந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து, மன்னிப்புச் சபை தூதுக் குழு ஜனாதிபதியைச் சந்திக்காமலேயே ஜெனீவாவுக்கு புறப்பட்டுச் சென்றது.

— இவ்வாறு பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

[உ-5-10]

## பல்கலை. அனுமதிக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியக் குழு முன்னர் தீர்மானித்தபடி விண்ணப்ப முடிவுத் திகதி இன்றேயாகும்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்கள் விண்ணப்பிக்க முடியாத நிலை குறித்து ஈ.பி.டி.பி. அமைப்பு எடுத்துரைத்து விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்குமாறு கோரியிருந்தது.

யாழ். மாணவர்கள் விண்ணப்பிக்க வசதியாக உரிய விண்ணப்பப்படிவங்களைக் கொழும்பிலிருந்து விமான மூலம் எடுத்துவரும் பணியில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாக ஈ. பி டி. பியின் யாழ். அலுவலகம் தெரிவித்தது.

[உ-10]

## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து மகளிர்கல்லூரி ஆசிரியை

**திருமதி மீனலோஜினி செல்லையா**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி வேலுப்பிள்ளை இராசமணி**

அவர்களின் மறைவையொட்டி அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஊழியர்கள்.

**யாழ். இந்து மகளிர் கல்லூரி.**

(49236)



**INSTITUTE OF INFORMATICS STUDIES**

**New Sessions Starting On Saturday 6th Sept, 97**

- ★ COMPUTER COURSES
- ★ ENGINEERING DRAWING
- ★ SHORT HAND & TYPE WRITING

DIRECTOR

IIS
68, Clock Tower Road,
Jaffna.

[C/1395]

உ

**மங்களகரமான திறப்பு விழா**

**இன்று முதல் யாழ். கஸ்தூரியார் வீதியில்......**

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**

**இலக்கம் 78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/1405)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணி மனையில் 27-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org